Koviloor Digital Library


சரஸ்வதி அந்தாதி

Acc.No. 16445



டாக்டர் துரை. இராசாராம்

Koviloor Digital Library



Koviloor Digital Library

3-3

கம்பரின்
சரசுவதி அந்தாதி

விளக்கவுரை:
டாக்டர் துரை. இராசாராம்



முல்லை நிலையம்
9, பாரதி நகர் முதல் தெரு,
தி.நகர், சென்னை—600 017.

Koviloor Digital Library

முதற் பதிப்பு : 2011

நூல் பற்றிய விவரங்கள்

நூல்பெயர்	:	கம்பரின் சரசுவதி அந்தாதி
விளக்கவுரை	:	டாக்டர் துரை.இராசாராம்
தாள்	:	வெள்ளைத்தாள் 11.6 கி.கி.
நூலின் அளவு	:	18.5 செ.மீ. × 12.5 செ.மீ.
பதிப்புரிமை	:	முல்லை நிலையம்
பக்கங்கள்	:	40
வெளியிடுவோர்	:	முல்லை நிலையம் 9, பாரதி நகர், முதல் தெரு, தி.நகர், சென்னை- 600 017.
பொருள்	:	நீதிநூல்
விலை	:	ரூ **15.00**
கணினி அச்சு	:	சிவா கிராபிக்ஸ், சென்னை-94. போன்: 8939475707
அச்சிட்டோர்	:	மோனார்க் கிராபிக்ஸ், சென்னை-94. போன்: 23621086

Koviloor Digital Library 3-3

கம்பர் வரலாறு

கவிச்சக்கரவர்த்தி கம்பர் சோழ நாட்டில் திருவழுந்தூரில் ஆதித்தன் மகனாக உவச்சர் குலத்தில் பிறந்தார். இளமையிலே தந்தை இறந்ததனால், தன் தாயுடன் திருவெண்ணெய் நல்லூர் சடையப்பவள்ளலிடம் போய்ச் சேர்ந்து, அவரால் ஆதரிக்கப் பெற்றார். அங்கு அவர், வள்ளலின் வீட்டுப்பிள்ளைகளின் புத்தகங்களை எடுத்துக் கொண்டு செல்லும் பணியைச் செய்ததோடு, அக்குழந்தைகளுடன் சேர்ந்து படித்தும் வந்தார். நல்லறிவும் பெற்றார்.

பள்ளியில் படித்து வருகின்ற நாளில் அவருடைய ஆசிரியர் வைரவபுரம் என்னும் கிராமத்திலுள்ள கம்பங்கொல்லை களையும் தினைக்கொல்லைகளையும் காப்பதற்காகத் தம்முடைய மாணவர்களை நாள்தோறும் அனுப்பும் முறைப்படி ஒரு நாள் இப்பிள்ளையை அனுப்பினார். இவரும் காலை வேளையில் சென்று கொல்லைகளைக் காத்து வரலானார். நடுப்பகலில் நல்ல வெயில் வந்தமையால் அவர் அருகில் இருந்த காளி கோயிலில் சென்று அமர்ந்தார்; அப்படியே தூங்கியும் விட்டார்.

அவர் அயர்ந்து உறங்கிக்கொண்டிருக்கையில் ஒரு குதிரைவந்து கொல்லையை மேய்வதாகக் கனாக்கண்டார். உடனே எழுந்தார். உண்மையிலே அவ்வூரை ஆள்வோனாகிய காளிங்கராயன் குதிரை கம்பங்கொல்லையைக் கண்டபடி மேய்ந்து கொண்டிருந்தது கண்டு, அதனைத் துரத்தமுயன்றார். முடியவில்லை. அதனால் அவர் அஞ்சி காளிகோயிலினுள் சென்று அழுது புலம்பினார். அப்பொழுது காளிகருணை கூர்ந்து எதிரில் தோன்றி 'குழந்தாய் அழாதே உன் நாக்கினை நீட்டு!' என்று சொல்ல அவரும் அங்ஙனமே நீட்ட தேவி

Koviloor Digital Library

அவர் நாவில் பீஜாட்சரத்தை எழுதி அருள்புரிந்தாள். பின்பு அவர் கொல்லையில் சென்று பார்க்க அப்பொழுதும் குதிரை மேய்ந்து கொண்டிருந்ததைக் கண்டார். காளிகாதேவியின் அருள் பெற்ற அவர் வாயினின்று,

'வாய்த்த வயிரபுர மாகாளி அம்மேகேள்,
காய்ந்த தினைப்புனத்துக் காலைவைத்துச் - சாய்த்து
கதிரை மாளத் தின்ற காளிங்க ராயன்
குதிரை மாளக் கொண்டு போ'

என்ற ஒரு பாடல் வெளிப்பட்டது. அவர் அவ்வாறு பாடியவுடன் அக்குதிரை விழுந்து இறந்தது.

இதனை அறிந்த ஆசிரியர் ஓடிவந்து பார்த்து, காளிங்க ராயனின் கோபத்திற்கு ஆளாக வேண்டுமே என அஞ்சி கலக்கமுற்று, திகைத்து நிற்க, கம்பரோ தாம் பாடிய வெண்பாவின் ஈற்று அடியை **'குதிரை மீளக் கொண்டு வா'** என்று மாற்றித்திருப்பிப்பாட மாண்ட குதிரை மீண்டு எழுந்தது. ஆசிரியர் பேரானந்தம் அடைந்தார்.

காளிங்கராயன் கம்பரின் அற்புதச் செயலைக் கேள்வியுற்று அக்காலத்தில் ஆட்சி செலுத்தி வந்த குலோத்துங்க சோழ மன்னனுக்கு அறிவிக்க, தன்பால் வருவித்தனன். இவரும் கோலுங்கையுமாய் நிற்க அவன், 'இக்கம்பனா இத்தகைய அற்புதச் செயலைச் செய்தான்!' என்றான். இதனாலும், கம்பங் கொல்லையைக் காத்ததனாலும் அன்றிலிருந்து இவருக்குக் கம்பர் என்ற பெயர் வழங்கலாயிற்று. அதன் பின் சோழ மன்னன் அவைக்களத்தில் அவைக்களப்புலவராகி, புவிச் சக்கரவர்த்திகள் போற்றும்படியாக, கவிச்சக்கரவர்த்தி எனப்புகழ்பெற்று விளங்கினார்.

மகாகவியாக விளங்கிய கம்பரது புதுமைத்திறம் உலகம் அறிய வேண்டும் என்று எண்ணிய சடையப்பவள்ளல் அவரைக் கொண்டு ஏதாவது ஒரு நூலைச் செய்யச்சொல்ல வேண்டுமென்று சோழ மன்னனிடம் கூற, அச்சோழ மன்னனும் கம்பர், ஒட்டக்கூத்தர் ஆகிய இருவரிடத்தும் இராமபிரான் சரிதத்தைப்பாடும்படி கட்டளையிட்டான். ஒட்டக்கூத்தர் முதலில் இராமாயணம் முழுவதையும்

Koviloor Digital Library

எழுதினார். கம்பரும் வான்மீகி, போதாயனம் போன்ற இராமாயணங்களை நன்கு கற்றுணர்ந்து இராமாயணத்தை எழுதலானார். கம்பருடைய வாக்கிற்குமுன் தன் வாக்கு தலையெடுக்காது என உணர்ந்த ஒட்டக்கூத்தர் தன் இராமாயணத்தை எரிக்க முயல, கம்பர் அதனை அறிந்து விரைவாக வந்து எரிப்பதைத் தடுக்க முயன்றார். ஆனால் யுத்தகாண்டம் வரை எரிக்கப்பட்டிருந்ததைக் கண்ட அவர் ஏழாவதாகிய உத்தரகாண்டத்தை எடுத்துத் தான் இயற்றிய இராமாயணத்தின் இறுதி - ஏழாவது - காண்டமாக அதனைச் சேர்த்துக் கொண்டார். தான் இயற்றிய இராமாயணத்தில் தன்னை ஆதரித்த சடையப்பவள்ளலை ஆயிரம் பாட்டுக்கு ஒரு பாட்டு வீதம் அவருடைய பெருமையைப் பாடி, தன் செய்ந் நன்றி மறவாத்தன்மையை எடுத்துக்காட்டினார். பின்னர் திருவரங்கம் பெரிய கோயிலில் மோட்டழகிய சிங்கர் சிரக்கம்பம் செய்யுமாறு ஸ்ரீநாதமுனிகள் என்னும் வைணவ ஆசிரியர் முன்னிலையில் தன்னுடைய இராமாயணத்தை அரங்கேற்றம் செய்தார். இதனை,

'எண்ணிய சகாத்தம் எண்ணூற்றேழின்மேல் சடையன் வாழ்வு
நண்ணிய வெண்ணெய் நல்லூர் தன்னிலே கம்பநாடன்
பண்ணிய இராம காதை பங்குனி அத்தநாளில்
கண்ணிய அரங்கர் முன்னே கவிஅரங் கேற்றினானே'

என்ற பாடல் நன்கு எடுத்துக்காட்டுகின்றது.

ஒரு முறை கம்பர் சோழமன்னனோடு கருத்து வேறுபாடு கொண்டு,

'மன்னவனும் நீயோ? வளநாடும் உன்னதோ?
உன்னை அறிந்தோ தமிழை ஓதினேன் - என்னை
விரைந்தேற்றுக் கொள்ளாத வேந்துண்டோ! உண்டோ
குரங்கேற்றுக் கொள்ளாத கொம்பு'

எனப்பாடி சேரநாடு சேர்ந்து, அச்சேரமன்னனிடத்தில், தாம் கம்பரிடம் அடைப்பக்காரனாய் இருந்ததாகக் கூறி, அவனிடத்தில் அடைப்பக்காரனாய்ச் சேர்ந்து அங்குத் தமது கல்வித்திறனைக் காட்டி அந்த மன்னனுடைய அன்பையும் நன் மதிப்பையும் பெற்றுச் சிலகாலம் வாழ்ந்து வந்தார்.

Koviloor Digital Library

மன்னன் இவர்பால் பெருமதிப்பு கொண்டிருக்க, அந்நாட்டு அவைக்களப்புலவர்கள் இவர் பால் பொறாமை கொண்டு, ஒரு நாவிதனுக்குப் பொருள் கொடுத்து, அவனைக் கொண்டு கம்பரைத் தமையனார் என்று சொல்லிச் சாதித்து அவரை அவமானப்படுத்த முயன்றார்கள். இதை அறிந்த கம்பர் உற்றுழி உதவும் அன்னை கலைமகளைப் பலவாறு போற்றி, இந்த நேரத்தில் தனக்கு அவளுடைய இடக்கால் சிலம்பைத் தந்தருள வேண்டும் என்று வேண்டிக்கொள்ள, அந்நாமகளும் அவ்வாறே அருள் செய்ய, அந்த அன்னையின் வைரச்சிலம்பொன்று உடனே கம்பர் கையில் தவழ்ந்தது. உடனே அதனை அவர் எடுத்துக்கொண்டு சென்று மன்னனுக்குக் காணிக்கைப் பொருளாகக் கொடுத்து, 'இதன் மறுசிலம்பு என்தம்பியான நாவிதனிடத்தில் இருக்கின்றது'; அதனையும் தாங்கள் பெற்றுக்கொள்ள வேண்டும்' என்று வேண்டிச் சென்றார்.

உடனே மன்னவன் மற்றொரு சிலம்பைக் கொண்டு வருமாறு நாவிதனுக்குக் கட்டளையிட்டான். என் செய்வான் பாவம்! 'இல்லை' என்று கூற, அரசனின் ஏவலர்கள் கடுமையான தண்டனை கொடுக்கலானார்கள். தண்டனையின் கடுமை தாங்கமாட்டாத அவன் உண்மையை உள்ளபடியே கூறி, நிலை நிறுத்தினான். அவைக்களப் புலவர்கள் வெட்கித் தலைகுனிந்தார்கள்.

பின்னர் மன்னவன் 'இந்த அற்புதச் சிலம்பு உங்களுக்கு எங்கிருந்து கிடைத்தது?' எனக்கம்பரைக் கேட்க, 'இது கலைமகளின் அருளால் கிடைத்தது', என்று கூறியதோடு அதனை உண்மையென நிரூபிக்க முப்பெருந்தேவியரில் ஒருத்தியான நாமகளைக் குறித்து கட்டளைக் கலித்துறையில் அந்தாதியாகப்பாடி மெய்ம்மறந்து வணங்கினார். உடனே கலைமகள் தோன்றி ஒற்றைக்கால் சிலம்பு ஒலிக்க நடனம் செய்துகொண்டு வந்து கம்பர் முன்னே நின்று தன் இடக்காலை நீட்டி 'எங்கே சிலம்பு?' என்று கேட்க, உடனே அவர் அரசனிடம் இருந்து சிலம்பை வாங்கி அத்தேவியின் இடத்திருவடிக்கு நேரே நீட்ட அவ்வளவில் அச்சிலம்பு

Koviloor Digital Library

அன்னையின் தளிரனைய திருவடிகளில் தவழ்ந்தது. அன்னையும் மறைந்தாள். அங்கிருந்த அனைவரும் காண முடியாத காட்சியைக் கண்ணெதிரே கண்டு மெய்மறந்து நின்றனர். சேரன் பின்னர் கம்பர் யார் என்ற உண்மையை அறிந்து தன் பிழை பொறுக்குமாறு வேண்டிக்கொண்டான். இவ்வாறு எழுதப்பட்ட அந்த நூல் தான் **சரசுவதி அந்தாதி** என்னும் பெயரைத் தாங்கி பல்லோராலும் பயபக்தியுடன் இன்றும் ஓதப்பட்டு காலத்தால் அழியாத ஒரு பெருநூலாக விளங்குகின்றது.

இவர் செய்த வேறு நூல்கள்: (1) சடகோபர் அந்தாதி (2)ஏரெழுபது (3) சிலை எழுபது (4) திருக்கைவழக்கம் ஆக் இராமாயணம் அல்லாத ஐந்து சிறுநூல்களைக் கம்பர் எழுதியுள்ளார். இதனை 'கம்பரின் சிற்றிலக்கியங்கள்' என்றே அழைக்கலாம். புகழேந்திப்புலவர், ஒட்டக்கூத்தர், ஔவையார் போன்றோர் இவர் காலத்துப் புலவர் பெருமக்கள் ஆவர்.

'வெண்பாவில் புகழேந்தி பரணிக்கோர் சயங்கொண்டான்
விருத்தம் என்னும்
ஒண்பாவிற்கு உயர்கம்பன் கோவை உலா அந்தாதிக்கு
ஒட்டக்கூத்தன்
கண்பாய கலம்பகத்திற்கு இரட்டையர்கள் வசைபாடக்
காளமேகம்
பண்பாகப் பகர்சந்தம் படிக்காசு அலாது ஒருவர் பகரொணாதே!

என்பதனால் விருத்தப்பா பாடுவதில் வல்லவர், இவர் இணையற்றவர் என்பது புலனாம். இதனால் இவரைக் **'கல்வியில் பெரியவர் கம்பர்'** என்றும் **'கவிச்சக்கரவர்த்தி'** என்றும் 'கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்!' என்றும் புகழ்ந்து கூறலாயினர். இவருடைய காலம் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு, கி.பி.12ம் நூற்றாண்டெனக் கூறுவாருமுளர். இவருடைய வரலாறு **புலவர்புராணம், விநோதரச மஞ்சரி** போன்ற நூல்களில் காணக்கிடைக்கின்றது.

Koviloor Digital Library



Koviloor Digital Library

சரசுவதி அந்தாதி

(தோற்றுவாய்)

'கவிச்சக்கரவர்த்தி' எனப்போற்றப்படுகின்ற கம்பநாடன், திருமாலின் திரு அவதாரங்களில் ஒன்றான இராமாவ தாரத்தின் பெருமையை அழகுதமிழில் 'இராமாயணம்' என்கின்ற பெருங்காப்பியம் செய்து, 'கம்பராமாயணம்' என்னும் பெயரில் எந்நாளும் இந்நிலவுலகில் விளங்கிடச் செய்து, இறவாப்புகழ் பெற்றார். அவருக்கு முன்போ பின்போ அத்தகைய ஏற்ற மிகு நூல் எம்மொழியிலும். எழுந்ததில்லை என்பது சான்றோர்களின் கருத்து. தேசிய கவி சுப்பிரமணிய பாரதியாரின் 'யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல், வள்ளுவர் போல் இளங்கோவைப் போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை உண்மை; வெறும் புகழ்ச்சி இல்லை' என்னும் கூற்றே இதற்குச் சான்றாகும்.

அத்தகைய உலகமகாகவிஞர்களில் ஒருவராகிய இக்கம்ப நாடர் வேறுபல நூல்களையும் செய்திருக்கலாம். அத்தகைய நூல்களில் இன்றுகிடைத்திருப்பன இந்த ஐந்து சிறு நூல்கள் மட்டுமே. அவையாவன.

(1) சரசுவதி அந்தாதி *(2)* சடகோபர் அந்தாதி *(3)* ஏரெழுபது *(4)* சிலை எழுபது *(5)* திருக்கை வழக்கம்.

அவற்றுள் சரசுவதி அந்தாதியானது கட்டளைக்கலித் துறையில் அந்தாதியாக **முப்பது பாடல்களைக்** கொண்டு இலங்குகின்றது. **'மூர்த்தி சிறிதென்றாலும் கீர்த்தி பெரிது'** என்பார்கள். அதுபோல இது சிறு பிரபந்தமாக இலங்கினாலும் சொல் நயம், பொருள் வளம், கற்பனை நலம் போன்றவற்றில்

Koviloor Digital Library

சிறந்து விளங்குகின்றது. உதாரணத்திற்கு ஒன்று காட்டுதும். இராமகாதையில் இராமபிரானின் அழகினை வருணிக்கப் புகுந்த கம்பநாடர், 'மையோ, மரகதமோ, மறிகடலோ மழைமுகிலோ என்று அடுக்கிக் கொண்டே போனார். ஓர் ஐயம் தோன்றி அப்படியே வருணிப்பதை விட்டார். இராமபிரானின் திருமேனியின் அழகிற்கு இவையெல்லாம் ஓரளவு ஒப்புமை ஆகுமே தவிர முற்றும் ஒப்புமை ஆகா என்று எண்ணி வேறு எதனைக் கூறுவது என்று எண்ணிப்பார்த்தார்; முடிவு ஏற்படவில்லை; அத்தகைய தன்னிகரற்ற அந்தத் திருமேனி காட்டிற்குச் செல்ல வேண்டியுள்ளதே என அஞ்சினார். இரக்கம் கொண்டார். வேறு உவமை சொல்லத் தெரியவில்லை. 'ஐயோ, இவன் வடிவு என்பதோர் அழியா அழகுடையான் பொய்யோ எனும் இடையாளோடும் இளையானொடும் (காட்டிற்குப்) போனான்' என்று கூறி அதற்கு முற்றுப்புள்ளி வைக்கின்றார். இதனை எண்ணிப்பார்க்கின்றார். அங்கே போல் இடையிலே நிறுத்திவிடாமல் முழுமையாக இங்கு வருணிக்கின்றார். அந்தப் பாடல் இதோ:

"மயிலே! மடப்பிடியே! கொடியே! இளமான் பிணையே!
குயிலே! பசுங்கிளியே! அன்னமே! மனக்கூரிருட்கோர்
வெளியே! நிலாஎழு மேனி மின்னே! இனிவேறு தவம்
பயிலேன் மகிழ்ந்து பணிவேன் உனது பொற்பாதங்களே"

கலைமகளை அழகுற முற்றாக வருணித்து இராம காதையில் நேர்ந்த முறையை இங்கே நிவர்த்தி செய்து விடுகிறார். அதேபோல் கலைமகளின் வடிவத்தினை,


"அடையாள நாண்மலர் அங்கையில் ஏடு மணிவடமும்
உடையாளை நுண்ணிடை ஒன்றும் இலாளை உபநிடதப்
படையாளை எவ்வுயிரும் படைப்பாளை பதுமநறுந்
தொடையாளை அல்லது மற்றுஇனியாரைத் தொழுவதுவே"

என ஓவியம் வரைந்தாற்போன்று சித்தரிக்கும் பாங்கு சிறப்புடையதாம்.

Koviloor Digital Library

இத்தகைய சிறப்புடைய சரசுவதி அந்தாதி நூலைப் பாடி கம்பர், சேரமன்னன் அவைக்களப்புலவர்கள் பொறாமை கொண்டு அரசன் முன் தன்னை அவமானப்படுத்த முன்வந்ததை, கலைமகளின் அருளினால் நீக்கி வெற்றி கொண்டார். இதன் காரணமாகச் சேர மன்னனின் நன்மதிப்பையும் பெற்றார். அப்போது தனக்கு அருள் புரிந்த கலைமகளின் மீது **கட்டளைக் கலித் துறையில்** முப்பது பாடல்களில் சரசுவதி அந்தாதி என்னும் இந்நூலைப்பாடினார்.

இலக்கியச் சுவை மிக்க இந்நூல் பாராயணத்திற்கும் உகந்ததாம். எனவே நாள்தோறும் இந்நூலைப் பாராயணம் செய்து கலைமகளின் அருளைப்பெறுவோமாக.


KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 16445
16445

Koviloor Digital Library

சரசுவதி அந்தாதி

சரசுவதியைப் பற்றி அந்தாதித் தொடையால் பாடப்பட்ட பிரபந்தம் என்பது பொருள். ஸரஸ்வதி என்னும் வட சொல்லுக்கு எங்கும் வியாபித்திருப்பவள் என்பது பொருள். சரசுவதி நான்முகனுடைய மனைவி; கல்விக்குரிய தெய்வம். கலைமகள், நாமகள், பாரதி, பிராமி, சாரதா என்னும் பெயர்களால் இந்தக்கல்விச் செல்வ வள்ளலை அழைப்பர்.

அந்தாதி என்பது தொண்ணூற்றாறு சிறுபிரபந்த வகைகளில் ஒன்றாகும். ஒரு செய்யுளின் இறுதியிலுள்ள எழுத்தோ, அசையோ, சீரோ அடியோ, அடுத்த பாட்டின் முதல் எழுத்தாகவோ, அசையாகவோ, பாடுவது அந்தாதியாகும்; இங்ஙனம் பாடும்பொழுது நூலின் இறுதிச்செய்யுளின் அந்தமே அந்த நூலின் முதற்செய்யுளின் ஆதியாக அமைத்தும் பாடின் அதனை மண்டல அந்தாதி என்பர். இச்சரசுவதி அந்தாதியும் அத்தகைய மண்டல அந்தாதியாகவே பாடப் பட்டிருக்கின்றதைக் காண்க.

இந்நூலில் முதலில் காப்புச் செய்யுட்களாகவுள்ள இரண்டு வெண்பாக்கள் நீங்கலாக ஏனைய முப்பது செய்யுட்களும் கட்டளைக் கலித் துறைகளால் அமைக்கப்பட்டுள்ளன.

Koviloor Digital Library

காப்பு

இக்காப்புச் செய்யுள்கள் இந்நூலாசிரியராகிய கம்ப நாட்டாழ்வார்க்கு வழிபடு கடவுள் வணக்கத்தோடு ஏற்புடைக் கடவுள் வணக்கமாக இருத்தலைக் கண்டு மகிழ்க.

ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என்அம்மை - தூய
உருப்பளிங்கு போல்வாள் என் உள்ளத்தின் உள்ளே
இருப்பள் இங்கு வாராது இடர்.

தெளிவுரை:

பொருந்திய அறுபத்து நான்கு வகைக் கல்வி வகை களையும் உரியபடி என்போன்று அடிமைப்பட்டவர் களுக்குத் தெரியச் செய்தருளுகின்ற என் அன்னையாக விளங்குபவளும் பரிசுத்தமான படிகம் போல வெண்ணிறத்தி யாகத் திகழ்பவளும் ஆகிய கலைமகள் என் உள்ளத்தின் உள்ளே எப்பொழுதும் எழுந்தருளியிருக்கின்றாள். ஆதலால் இவ்விடத்தில் எத்தகைய துன்பங்களும் நெருங்கா.

சிறப்புரை:

கலைகள் அறுபத்து நான்கு. வேதம், இதிகாசம், புராணம், இலக்கணம், நீதிசாத்திரம், சோதிடசாத்திரம், தருமசாத்திரம், கணிதம், யோகசாத்திரம், மந்திரசாத்திரம், மருத்துவம், இசை, நடனம் போன்றவை ஆகும். கலைமகளை நான் வழிபடு கடவுளாகக் கொண்டு எப்பொழுதும் அன்போடு போற்றுகின்றேன். ஆதலால், யான் நினைத்தவண்ணமாய் என் உள்ளக்கமலத்தில் எழுந்தருளியிருக்கின்றாள். ஆகையால், யான் இயற்றத் தொடங்கிய இப்பிரபந்தத்துக்கும், யான் விரும்பும் நற் பேறுகளுக்கும் இடையூறு எதுவும் நேராது எனத்

Koviloor Digital Library

துணிந்து கூறினார் என்க. சத்துவகுணம் வெண்ணிறத்தைக் குறிக்கும். ஆகையால் அந்நிறத்தை உடைய நாமகளை 'தூய உருப்பளிங்கு போல்வாள்' என்றார்.

படிக நிறமும் பாவச்செவ் வாயும்
கடிகமழ்பூந் தாமரைபோல் கையும் - துடியிடையும்
அல்லும் பகலும் அனவரத மும்துதித்தால்
கல்லும் சொல் லாதோ கவி.

தெளிவுரை:

கலைமகளின் படிகம் போன்ற திருமேனியின் வெண்ணிறத்தையும் பவளம் போன்ற சிவந்த வாயினையும் மணம் வீசுகின்ற செந்தாமரை போன்ற சிவந்த திருக்கை களையும், உடுக்கை போன்ற இடையினையும் இரவும், பகலுமாக எப்பொழுதும் துதித்தால் அசேதனப் பொருளாகிய கல்லும் உயிர் பெற்றெழுந்து கவிபாடமாட்டாதோ? (தவறாது பாடும் என்றவாறு)

சிறப்புரை:

கல்லும் கவிபாடும் என்றமையால் எத்தகைய அறிவீனர் களும் கலைமகளை வழிபட்டால், அவளுடைய திருவருளைப் பெற்று, கவிபாடக்கூடுமென்று, அவ்வன்னையின் மகிமையை உணர்த்தினார் என்க. காளிதாசர் போன்றோர் வரலாற்றைக் காண்க. பவளச்செவ்வாய் - உவமைத்தொகை; கல்லும் - இழிவுச்சிறப்பும்மை; அனவரதம் - எப்பொழுதும்; கடி - மணம். உரிச்சொல். ஸ்படிகம், ப்ரவாளம் என்ற வடசொற்கள் விகாரப்பட்டு முறையே படிகம், பவளம் என வந்தன.

நூல்

1. சீர்தந்த வெள்ளிதழ்ப் பூங்கமல ஆசனத்தேவி செஞ்சொல்.
தார்தந்த என்மனத் தாமரை யாட்டிசரோ ருகமேல்
பார்தந்த நாதன்இசை தந்த ஆரணப் பங்கயத்தாள்
வார்தந்த சோதிஅம் போருகத் தாளை வணங்குதுமே.

Koviloor Digital Library

தெளிவுரை:

சிறப்புப் பொருந்திய வெண்டாமரை மலரை ஆசனமாகக் கொண்டவளும், செவ்விய சொற்களின் பாமாலையை உருவாக்கி எழுதவும், பேசவும், சிந்திக்கவும் கொடுத்து, என் மனத்தாமரையில் வீற்றிருந்து ஆள்பவளும், திருமாலின் திருவுந்திக் கமலத்தில் தோன்றி உலகங்களைப் படைத்த நாதனான நான்முகன் இசையோடு வெளியிட்ட வேதங் களாகிய தாமரைமலரில் எழுந்தருளியிருப்பவளுமாகிய கலைமகளின் ஒளி வீசுகின்ற செந்தாமரை மலர் போன்ற திருவடிகளை யாம் வணங்குவோம்.

சிறப்புரை:

ஆதியில் திருமால் தனது உந்திக் கமலத்தில் தோன்றிய நான்முகனுக்கு வேதங்களை உபதேசிக்க, அப்பெருமான் பின்பு அவற்றை உலகத்தில் வெளியிட்டான். ஆதலால், 'சரோருகம்மேல் பார்தந்த நாதன் இசை தந்த ஆரணம்' என்றார். தாமரை, குளத்தில் முளைப்பதனால் சரோருகம் எனவும் சேற்றில் முளைப்பதனால் 'பங்கயம்' எனவும் நீரில் முளைப்பதனால் 'அம்போருகம்' எனவும் வேறு பெயர் களைப் பெற்றது என்பர். அன்புடையவரின் இதயக்கமலத்தில் வீற்றிருப்பாள், ஆகலின் 'மனத்தாமரையாட்டி' என்றார். இப்பாடலில் 'தாமரை' என்ற ஒரே பொருளைக் குறிக்கின்ற கமலம், சரோருகம், பங்கயம், அம்போருகம் என்னும் பல சொற்கள் வந்துள்ளதனால் இப்பாட்டு பொருட்பின் வருநிலையணி ஆயிற்று. ஆரணம் - வேதம். வணங்குதும் உளப்பாட்டுத் தன்மைப்பன்மை எதிர்கால வினைமுற்று.

2. வணங்கும் சிலைநுத லம்கழைத் தோளும்
வனமுலைமேல்
சுணங்கும் புதிய நிலவெழு மேனியும் தோட்டுடனே
பிணங்கும் கருந்தடங் கண்களும் நோக்கிப்பிரமன் அன்பால்
உணங்கும் திருமுன் றிலாய்மறை நான்கும் உரைப்பவளே.

Koviloor Digital Library

தெளிவுரை:

வேதங்கள் நான்கினையும் உரைக்கின்ற கலைமகள் அன்னையே! உன்னுடைய வளைந்த வில் போன்ற நெற்றியையும் இளமூங்கில்போன்ற தோள்களையும், அழகிய முலைகள் மேல்படர்ந்த தேமலையும், நிலவொளி வீசும் வெண்ணிறத் திருமேனியையும், காதணிகளோடு போர் செய்கின்ற அகன்ற கரிய நீண்டகண்களையும் உன் கொழுநன் நான்முகன் பார்த்து, பார்த்து அன்பினால் வாடிக் கிடக்கும்படியான அழகிய திருமுற்றத்தினை உடையவளாய் இருக்கின்றாய்.

சிறப்புரை:

"உன் தலைவனான நான்முகனிடத்து நீ ஊடல் கொண்ட போது அவ்வூடலைத் தணித்துக் கூடப் பெறாமையால், அந்நான்முகன் நின் நெற்றிமுதலான அவயவங்களின் அழகினை நோக்கி, நோக்கி, வருந்தி நின் திருமுற்றத்தில் காத்துக் கிடக்கின்றான்" என நாமகளின் நலத்தினை நயந்து கூறினார். மறை நான்கும் உரைப்பவள் என்றது 'வேதத்திற்கு அதிதேவதை' என்பதைக்குறிக்கலாம். வணங்கும் சிலை - வளைந்த வில்; சுணங்கு - தேமல்; தோடு - காதணி; 'தோட்டுடனே பிணங்கும் கருத்தடங் கண்கள்' என்பதற்கு 'காதளாவிய நெடிய கண்கள்' என்பது பொருள். உணங்குதல் - வாடியிருத்தல்.

3. உரைப்பார் உரைக் கும்கலைகள் எல்லாம் எண்ணில்
என்னை அன்றித்
தரைப்பால் ஒருவர் தரவலரோ தண்தர ளம்முலை
வரைப்பால் அமுதுதந்து இங்குஎனை வாழ்வித்த மாமயிலே
விரைப்பா சடைமலர் வெண்டா மரைப்பதி
மெல்லியலே.

தெளிவுரை:

மாமயிலே, மெல்லியலே, தரைப்பால் ஒருவர் தரவலரோ எனக்கூட்டிப் பொருள் கொள்க.

Koviloor Digital Library

குளிர்ந்த முத்துமாலைகளை அணிந்த, நினது முலைப் பாலாகிய அமிழ்தத்தைக் கொடுத்து இவ்வுலகில் என்னைப் பெருமையோடு நன்றாக வாழச்செய்த மயில் போன்ற சாயலையுடைய அன்னையே! பசுமையான இலைகளோடு கூடிய வெண்டாமரை ஆகிய ஆசனத்தில் வீற்றிருக்கின்ற மென்மைத் தன்மை மிக்க நாமகளே! ஆராய்ந்து பார்த்தால் இவ்வுலகத்திலுள்ளார் சிறப்பித்துக் கூறுகின்ற ஆயகலைகள் அறுபத்து நான்கினையும் இவ்வுலகத்தில் தாயே! உன்னை அல்லாமல் பிறரொருவர் கொடுக்கும் தன்மையுடையவர் ஆவார்களோ! (ஆகார் என்றவாறு).

சிறப்புரை:

'உன்னையன்றித் தரைப்பால் ஒருவர் தரவல்லரோ! என்றதனால் நீ ஒருத்தியே ஆயகலைகள் அறுபத்து நான்கினையும் என் போன்ற அடியார்களுக்குத் தரவல்லவள் என்பதாம்; தரைப்பால் - இவ்வுலகில்; தரளம் - முத்து; முலைவரை - உருவகம்; 'முலைவரைப் பால் அமுது' என்பது இங்கு ஞானப்பாலைக் குறித்தது என்க; பாசடை - பசுமை + அடை பண்புத்தொகை. வெண்டாமரைப்பதி - வெண் தாமரையாகிய இருப்பிடம்.

4. இயலானது கொண்டு நின்திரு நாமங்கள் ஏத்துதற்கு
முயலாமை யால்தடுமா றுகின்றேன் இந்த மூவுலகும்
செயலால் அமைத்த கலைமகளே நின்திருவருளுக்கு
அயலா விடாமல் அடி யேனையும் உவந்து ஆண்டு அருளே.

தெளிவுரை:

"இயற்றமிழ் இன்னிசைப் பாடல்களினால் நின்திரு நாமங்களை ஓதுதற்கு இதுவரை முயலாததனால் நான் நிலை தடுமாறித் தத்தளிக்கின்றேன்; இந்த மூன்று உலகங்களையும் நின் செயலால் படைத்தருளிய கலைமகள் அன்னையே! நினது சிறந்த திருவருளுக்குப்புறம்பாக, கடைத்தேற வழியற்று விட்டிடாமல் உனக்கு அடிமைப்பட்டவனாகிய என்னையும் ஏனைய அடியார்களைப்போலவே அன்பு கொண்டு பாதுகாத்து அருள்வாயாக."

Koviloor Digital Library

சிறப்புரை:

உலகத்தவர் அனைவரையும் தனது கல்வி அருள் நிகழ்ச்சியால் நடைபெறச்செய்தலால், "இந்த மூவுலகும் செயலால் அமைத்த கலைமகளே" எனப் போற்றினார். சகல உலகங்களையும் படைக்கும், நான்முகனது தொழிலை உபசாரமாக சக்தி சொரூபமாக விளங்குபவளும், அவன் துணைவியுமான கலைமகளின் மேல் ஏற்றிக் கூறினார் எனவும் கூறுவர். இயல் - இயற்றமிழ்ப்பாசுரங்கள்; அயலா - அயலாக என்பதன் விகாரம்; முயலாமை - எதிர்மறைத் தொழிற்பெயர்.

5. அருக்கோ தயத்தினும் சந்திரோ தயம் ஒத்து அழகெறிக்கும்
திருக்கோல நாயகி செந்தமிழ்ப் பாவை திசைமுகத்தான்
இருக்கோது நாதனும் தானும் எப்போதும் இனிதிருக்கும்
மருக்கோல நாள்மலராள் என்னை ஆளும் மடமயிலே!

தெளிவுரை:

சூரிய உதயத்தினை விட மிகுதியாகப் பொலிவுற்று விளங்கும் சந்திர உதயத்தைப் போன்ற அழகிய ஒளியை வீசுகின்ற திருமேனியையுடைய தலைவியும், செந்தமிழுக்கு உரிய அன்னையும், நான்கு திசைகளையும் நோக்கி, நான்கு திருமுகங்களால் இருக்குமுதலான நான்குவேதங்களையும் ஓதிக் கொண்டிருக்கின்ற மணமிக்க அன்றலர்ந்த வெண்டாமரையில் வாழ்பவளுமாகிய கலைமகள் என்னை ஆட்கொண்டு அருளும் உயர் அன்னையே ஆவாள்.

தெளிவுரை:

அன்னை கலைமகளின் அழகிய திருமேனி வெண்ணிற மாய்ச்சூரியன் ஒளியினும் குளிர்ந்த தன்மையோடு பிரகாசித்தல் பற்றி 'அருக்கோதயத்தினும் சந்திரோதயம் ஒத்து அழகெறிக்கும் திருக்கோலம்' என்றார் என்க. அருக்கன் - சூரியன், ஞாயிறு, பகலவன், தினகரன், எல்லோன், இரவி, கதிரவன், தபனன், ஆதித்தன், பரிதி, ஆதவன் எனப் பல பெயர்களால் வழங்கும் ஒரு சொல் சூரியன் என்கின்ற அருக்கன் ஆகும். மடமயில் - இளமைக்குணம் மிக்க மயில்

Koviloor Digital Library

போன்ற சாயலையுடைய ஒன்றற்குச் சிறப்புப் பெயராக வருவதோடு எல்லாவேதங்கட்கும் பொதுப் பெயராகவும் இது விளங்கும். மரு - மணம்; நாள்மலர் - அன்றலர்ந்த மலர்; திருக்கோலம் - திருமேனி.

6. **மயிலே! மடப்பிடியே! கொடியே! இளமான் பிணையே!**
குயிலே! பசுங்கிளியே! அன்னமே! மனக்கூரிருட்கோர்
வெயிலே! நிலவெழும் மேனிமின்னே! இனி வேறுதவம்
பயிலேன் மகிழ்ந்து பணிவேன் உனதுபொற் பாதங்களே.

தெளிவுரை:

சாயலில் மயில் போன்றவளே! நடையழகில் இளமையான பெண்யானை போன்றவளே! மெல்லிய வடிவில் அசைந்து அசைந்து அழகொடு நடக்கும் திறத்தில் பூங்கொடி போன்றவளே! பார்வை அழகில் இளமையான பெண்மான் போன்றவளே! இனிய குரலில் குயில் போன்றவளே! கொஞ்சுமொழி பேசுதலில் பச்சைக் கிளி போன்றவளே! நடை அழகில் அன்னம் போன்றவளே! உயிர்களின் மனத்திலுள்ள அறியாமையாகிய இருளைப் போக்குகின்ற ஒப்பற்ற சூரியனுடைய ஒளிக்கதிர் போன்றவளே! சந்திர ஒளியினைப் போல் வெள்ளொளி விளங்குகின்ற வெண்ணிறத் திருமேனியை உடைய மின்னல் என ஒளி வீசுபவளே! இனி, வேறுயாரைக் குறித்தும் தவம் செய்யமாட்டேன். மகிழ்ச்சியோடு உனது இருபாத கமலங்களையே போற்றி வணங்குவேன்.

சிறப்புரை:

புறவிருளை நீக்குகின்ற வெயிலினும் அக இருளாகிய அறியாமையை நீக்குகின்ற சிறப்பு கருதி 'ஓர் வெயில்' எனச் சிறப்பித்துக் கூறினார். இப்பாட்டில் கலைமகளின் சாயல், நடை, பார்வை, குரல், திருமேனியின் அழகு ஆகியவற்றை அழகிய உவமைகளைக்கொண்டு போற்றித் துதிக்கும் பாங்கு போற்றற்குரியதாம். கூர் - உரிச்சொல் (பகுதி); மயூரம், ஹம்ஸம் என்னும் வட சொற்கள் முறையே மயில் எனவும், அன்னம் எனவும் திரிந்து வந்தன.

Koviloor Digital Library

7. பாதாம் புயத்தில் பணிவார் தமக்குப் பலகலையும்
வேதாந்த முத்தியும் தந்துஅருள் பாரதி வெள்ளிதழ்ப்பூஞ்
சீதாம்பு புயத்திலிருப் பாள்இருப்ப என்சிந் தையுள்ளே
ஏதாம் புவியில் பெறல் ஆவது எனக்கினியே?

தெளிவுரை:

உனது திருவடித் தாமரைகளில் விழுந்து வணங்கி எஞ்ஞான்றும் துதிப்பவர்களுக்கு, ஆயகலைகள் அறுபத்து நான்கினையும், வேதங்களின் இறுதியாக உள்ள மோட்சத்தையும் தந்து அருள்கின்ற பாரதி என்னும் ஒப்பற்ற திருநாமத்தை உடையவளும், குளிர்ந்த வெண்டாமரையில் வீற்றிருப்பவளுமான அன்னை கலைமகள் என்மனத்தில் எழுந்தருளியிருக்கின்றாள். அவ்வாறு எழுந்தருளியிருப்பதால் இனிமேல் இவ்வுலகத்தில் எனக்குக் கிடைத்தற்கரிய பொருள் என்று சொல்லக் கூடியது எது? (எதுவும் இல்லை என்றபடியாம்)

சிறப்புரை:

நான் கலைமகளை இடைவிடாது எப்பொழுதும் தியானித்துப் போற்றி, அவ்வன்னையின் மாறாத அருளினைப் பெற்றிருப்பதனால் எல்லாப் பேறுகளும் இனி எனக்கு எளிதில் கிடைக்கும் என்பதாம். பாதம் + அம்புயம் - பாதாம் புயம் - திருவடித் தாமரை. உருவகம். 'பலகலை' முன்பு சொல்லப்பட்ட 'அறுபத்து நான்கு கலைகள்' ஆகும். பாரதி - கலைமகளுக்கு உரிய பெயர். எல்லாவற்றையும் பரிப்பவள். (பரித்தல் - தாங்குதல்) காரணப் பெயர். நீரில் தோன்றுகின்ற காரணத்தினால் தாமரை 'அம்புயம்' என்று பெயர் பெற்றது. அம்பு - நீர்.

8. இனிநான் உணர்வது எண்எண் கலையாளை,
இலகுதொண்டை
கனிநாணும் செவ்விதழ் வெண்ணிறத் தாளைக் கமலஅயன்
தனிநா யகியைஅகி லாண்டமும் பெற்ற தாயை, மணம்
பனிநாள் மலர்உறை பூவையை, ஆரணப்பா வையையே.

Koviloor Digital Library

தெளிவுரை:

ஆரணப்பாவையையே இனிநான் உணர்வது என இயைக்க, அறுபத்து நான்கு கலை ஞானங்கட்கு உரியவளும், கொவ்வைக் கனியும் நிகராகாது வெட்கமடைதற்குக் காரணமாக விளங்குகின்ற சிவந்த வாய் இதழ்களையும், வெண்ணிறத் திருமேனி நிறத்தையும் உடையவளும் உந்தித் தாமரையில் வாழ்கின்ற நான்முகனுடைய ஒப்பற்ற திருத் தேவியும், அனைத்து அண்டகோளங்களையும் ஈன்று எடுத்த வளும், மணமிக்க அன்றலர்ந்த வெண்டாமரையில் வீற்றிருக் கின்ற கிளி போன்ற கொஞ்சு மொழி பேசுபவளும் வேதங் கட்கு உரிய அதிதேவதையாக விளங்கக் கூடியவளும் ஆகிய அன்னை கலைமகளையே,

இனி நான் தியானித்துப் போற்றுவேன் என்றபடியாம்.

எண் எண் - கலை: அறுபத்து நான்கு கலைகள்; தொண்டைக்கனி - கொவ்வைக்கனி; 'கமலம்' என்பது இங்கு திருமாலின் உந்தியில் தோன்றிய தாமரையைக் குறித்தது. அயன் - நான்முகன், பிரமன். ஆரணம் -வேதம்.

9. பாவும் தொடையும் பதங்களும் சீரும் பலவிதமா
மேவும் கலைகள் விதிப்பா ளிடம்விதி யின்முதிய
நாவும் பகர்ந்த தொல்வேதங் கள்நான்கும் நறுங்கமலப்
பூவுந் திருப்பதம் பூவால் அணிபவர் புந்தியுமே.

தெளிவுரை:

பாடல்களும், தொடைகளும், சொற்களும் சீர்களும் எனப் பல வகையாக அமையப்பெற்ற நூல்களை நிர்வகிப்பவளான நாமகள் அன்னைக்கு உரிய இருப்பிடங்களாவன: எல்லா உயிர்களுக்கும் முன்னவனான நான்முகனுடைய திருநாக்கு; அவனால் சொல்லப்பட்ட நான்கு வேதங்கள்; நறுமணமிக்க வெண்டாமரைமலர்; தனது திருவடிகளை, மலர்களைக் கொண்டு மனமொழி மெய்யோடு ஒன்றி அருச்சிக்கின்ற அடியவர்களுடைய மனமும்.

Koviloor Digital Library

சிறப்புரை:

கலைமகளின் இருப்பிடங்களைத் தொகுத்துக் கூறுகின்றார். இப்பாட்டில் பா - வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, மருட்பா என்னும் பாவகைகளும் அவற்றின் இனங்களாகிய துறை தாழிசை, விருத்தம் போன்றவைகளும் ஆகும். தொடை - எழுத்துக்கள். அழகு பட ஒன்றிவரத் தொடுப்பது ஆகும். எதுகை, மோனை, முரண், இயைபு போன்றவை ஆம். பதங்கள் பகுபதம், பகாப்பதம், பெயர், வினை, இடை, உரிச்சொல் போன்ற சொற்கள்; சீர் - ஓரசைச்சீர், ஈரசைச்சீர், மூவசைச்சீர், நாவசைச்சீர் போல்வன; விதிப்பாள் - கல்விக்கடவுள் (சரசுவதி) வினையாலனையும் பெயர்; விதி - நான்முகன் எல்லா உயிர்களுக்கும் முதன்மை யானவன் என்பது தோன்ற 'விதியின் முதிய' என்றார். இதனால் தான் நான்முகனை 'பிதாமகன்' எனக்கூறுவர். வேதம் ஒருவரால் ஆக்கப்படாமல் தொன்று தொட்டு நிலவி வருதலின் 'தொல்வேதம்' என்றார். இது பற்றியே இதற்குச் 'செய்யாமொழி' என ஒரு பெயரும் வழங்கி வருகின்றது. வேதங்கள் நான்கு (1) இருக்கு (2) யசுர் (3) சாமம் (4) அதர்வணம்.

10. புத்தியில் கூர்இருள் நீக்கும் புதிய மதியும் என்கோ!
அந்தியில், தோன்றிய தீபம்என் கோ! நல் லரு மறையோர்
சந்தியில் தோன்றும் தபனன்என் கோ! மணித் தாமம் என்கோ!
உந்தியில் தோன்றும் பிரான்புயம் தோயும் ஒருத்தியையே.

தெளிவுரை:

உந்தியில் தோன்றும் பிரான் புயம் தோயும் ஒருத்தியை, மதியம் என்கோ, தீபம் என்கோ, தாமம் என்கோ எனக் கூட்டிப் பொருள் கொள்க.

திருமாலின் திருஉந்திக் கமலத்தில் தோன்றிய படைத்தல் கடவுளாகிய நான்முகனின் திருத் தோள்களைத் தழுவுகின்ற கலைமகளாகிய ஒப்பற்ற அன்னையை.''

உலக உயிர்களின் உள்ளத்தில் இருக்கின்ற அறியாமையாகிய இருளைப் போக்குகின்ற புற இருளை நீக்குகின்ற தல்லாத

Koviloor Digital Library

புதிய சந்திரன் என்று சொல்லுவேனோ! மாலைப் பொழுதில் ஏற்றப்படும் ஒளிர்கின்ற விளக்கு என்று கூறுவனோ! நான்கு வேதங்களுக்கும் உரியவர்களான அந்தணர்கள் காலைப் பொழுதில் வணங்குகின்ற ஆதவன் என்று சொல்வேனோ! மிளிர்கின்ற மாணிக்கம் என்று இயம்புவேனோ!

சிறப்புரை:

அன்னை கலைமகளின் திவ்விய சொரூபமானது சந்திர, சூரிய, அக்கினி என்னும் முச்சுடர்களையும், மாணிக்க மாலையாகவும் கூறக்கூடிய அளவில் உள்ளது என்கின்றார். எனவே அவற்றை விட உயர்ந்த அழகுடன் அச்சரசுவதியின் திவ்வியசொரூபம் மிளிர்கின்றது என்பது பொழுதையும் 'சக்தி' என்பது காலைப்பொழுதையும் குறிக்கின்றன. என்கோ- தன்மை ஒருமை எதிர்கால வினைமுற்று. தபனன் - சூரியன்; மணித்தாமம் - மாணிக்கமாலை.

11. **ஒருத்தியை ஒன்றுமிலா என்மனத்தில் உவந்து தன்னை**
இருத்தியை வெண்கமலத் திருப்பாளை எண்எண் கலைதோய்
கருத்தியை ஐம்புலனும் கலங்காமல் கருத்தை எல்லாம்
திருத்தியை யான்மறவேன் திசைநான் முகன்தேவி யையே.

தெளிவுரை:

திசை நான்முகன் தேவியை யான்மறவேன் எனக் கூட்டிப் பொருள் காண்க.

தன்னிகரற்றவளும், யாதொரு நற்சிந்தையும் இல்லாத என் மனத்திலே மகிழ்ச்சி கொண்டு எழுந்தருளியிருப்பவளும், வெண்தாமரை ஆசனத்தில் வீற்றிருப்பவளும், அறுபத்து நான்கு கலைஞானம் நிறைந்த பேரறிவு சார்ந்த மனத்தை யுடையவளும், தன் அடியார்களுடைய ஐம்புலன்களைத் தடுமாறாதபடி ஒரு வழியில் நிறுத்தி, அவர்களின் உள்ளத்தைத் திருந்தச்செய்பவளும், நான்கு திக்குகளை நோக்கியபடி நான்கு திருமுகங்களை உடையவனான நான்முகனின் திருத்தேவியும் ஆகிய அன்னை கலைமகளை எக்காலத்தும் நான் மறக்கமாட்டேன் (இடைவிடாமல் போற்றிக் கொண்டிருப்பேன் என்பதாம்).

Koviloor Digital Library

சிறப்புரை:

ஒருத்தி- ஒப்பற்றவள்; கருத்து- மனம்; 'ஐம்புலனும் கலங்காமல் கருத்தை யெல்லாம் திருத்தி' என்னும் தொடர் 'சென்றவிடத்தால் செலவிடாது தீதொரீஇ நன்றின்பால் உய்ப்பது அறிவு!' என்னும் திருக்குறளின் சாயலைப் பெற்றுள்ளதைக்காண்க.

12. தேவரும் தெய்வப் பெருமானும் நான்மறை செப்புகின்ற
மூவரும் தானவ ராகியுள் ளோரும் முனிவ ரரும்
யாவரும் ஏனைய எல்லா உயிரும் இதழ்வெளுத்த
பூவரும் மனதின் அருள்கொண்டு ஞானம் புரிகின்றதே.

தெளிவுரை:

தேவரும், தெய்வப்பெருமானும், மூவரும், தானவராகி யுள்ளோரும், முனிவரரும், ஏனைஎல்லா உயிரும் ஞானம் புரிகின்றது, பூவரும் மாதின் அருள் கொண்டு என இயைத்துப் பொருள் கொள்க.

தேவர்களும், அத்தேவர்களின் தலைவனாகிய இந்திரனும், நான்மறைகளை ஓதுகின்ற அயன், அரி, அரன் என்ற மும்மூர்த்திகளும், அசுரர்களும், முனிவர்களும், மற்றும் உயர்திணையிற்பட்ட எல்லா உயிர்களும், மற்றைய. அஃறிணையாகவுள்ள அனைத்து உயிர்களும் அறிவு கொண்டிருத்தல் என்பது வெண்தாமரையில் வாழ்கின்ற எங்கள் கலைமகளின் அருளினாலேயேயாம்.

சிறப்புரை:

உயர்திணை, அஃறிணை ஆகிய அனைத்து உயிர்களும் பெற்றுள்ள இயற்கை அறிவுக்கும் செயற்கை அறிவுக்கும் காரணம் சரசுவதியின் அருளேயாம் என்பது இப்பாடலின் கருத்தாம். மூவர் - அரி, அரன், அயன் என்ற மும்மூர்த்திகள் தொகைக்குறிப்புச்சொல்; தானவர் - அசுரர். காசிபமுனி வருக்கும் தனு என்பாளுக்கும் பிறந்தவர். ஆதலால் 'தானவர்' என்ற பெயர் பெற்றனர். பூ - தாமரை. அடைமொழி கொடாமல் பூ என்றால் அது தாமரையைக்குறிக்கும்.

Koviloor Digital Library

ஆதலால் 'இதழ் வெளுத்தபூ' என்பது இங்கு வெண் தாமரையைக் குறித்தது என்க.

12. புரிகின்ற சிந்தை யினூடை புகுந்துபுகுந்து இருளை
அரிகின்றது ஆய்கின்ற எல்லா அறிவினரும் பொருளைத்
தெரிகின்ற இன்பம் கனிந்தூறி நெஞ் சம்தெளிந்து முற்ற
வரிகின்றது எண்எண் கலைமாது உணர்த்தியவே தமுமே.

தெளிவுரை:

உள்ளத்தினுள்ளே, தன்னை விரும்பிப் பயில்கின்றவர்களுடைய மனத்தினுள்ளே அவர்கள் அவற்றைப் பயிலப் பயில நன்றாகச் சென்று நிலைபெற்று, அவர்கள் மனத்திலுள்ள அறியாமையாகிய அக இருளை அழிக்கின்றதும், நுட்பமாக ஆராய்கின்ற அறிவினால் அருமையான தத்துவப் பொருளை அறிந்து, அதனால் அவரவர் அடைகின்ற ஆனந்தம் முதிர்ந்து ஊறப்பெற்று, அவர்களுடைய நெஞ்சம் தெளிவடைந்து போற்றுகின்றதும், அறுபத்து நான்கு கலைஞானத்திற்கும் உரிய அன்னையான சரசுவதியினால் சொல்லப்பட்ட வேதங்களேயாம்.

சிறப்புரை:

இங்கு "வேதங்கள் தன்னை ஓதி உணர்வாரது அறியாமையைப் போக்கி நல்லறிவு கொளுத்தும்." அதே போல் நுட்பமான வேதாந்தத்தை ஆராய்ந்து உண்மைப் பொருளை உணர்ந்து, அதனால் மனந்தெளித்து போற்றச் செய்யும் என்பவற்றை இப்பாட்டு கூறுகின்றது என்க. வேதம் கல்வியின் சொரூபம். ஆதலால் 'கலைமாது உணர்த்திய வேதம்' எனப்பட்டது. வேதமும் என்பதில் 'உம்' என்னும் இடைச்சொல் அசைநிலையாம்.

14. வேதமும் வேதத்தின் அந்தமும் அந்தத்தின் மெய்ப்பொருளாம்.
பேதமும் பேதத்தின் மார்க்கமும் மார்க்கப் பிணக்கறுக்கும்
போதமும் போத உருவாகி எங்கும் பொதிந்தவிந்து
நாதமும் நாத வண்டார்க்கும் வெண்டாமரை நாயகியே.

Koviloor Digital Library

தெளிவுரை:

"நாத வண்டார்க்கும் வெண்டாமரை நாயகியே, வேதமும், வேதத்தின் அந்தமும், மெய்ப்பொருளாம் பேதமும், பேதத்தின் மார்க்கமும் போதமும், விந்து நாதமும் (அவள்)" எனக் கூட்டிப்பொருள் கொள்க.

இனிய ஓசையையுடைய வண்டுகள் ஒலிக்கப் பெற்ற வெண்டாமரை மலரில் எழுந்தருளியிருக்கப் பெற்ற நாயகியான கலைமகள், எல்லா வேதங்களும், அந்த வேதங்களின் அந்தங்களாகிய உபநிடதங்களும், அந்த உபநிடதங்களில் கூறப்பட்டுள்ள உண்மைப் பொருளாகிய கடவுளரின் பேதங்களும், அந்தக் கடவுளரைப் பின்பற்றும் பல்வகைச் சமயமார்க்கங்களும், அந்தச் சமயமார்க்கங்களின் ஞான சொரூபமாகி எல்லா இடங்களிலும் மறைக்குள் உறைகின்ற விந்து நாதமும் ஆக விளங்கக்கூடியவள் ஆவாள்.

சிறப்புரை:

கலைமகளானவள் வேதங்களாகவும் வேதாந்தமாகவும் கடவுளரின் மூர்த்தி பேதமாகவும், பல்வகைச்சமயமாகவும், அவற்றின் உண்மைப் பொருளாகவும், விந்துநாதமாகவும் ஆக எல்லாப் பொருள்களிலும் பரிணமித்திருப்பவள் ஆவள் என்பது கருத்தாம். வேதாந்தம் - உபநிடதம்; வேதாந்தத்தில் கூறப்பட்ட அயன், அரி, அரன் முதலிய மூர்த்தி பேதங்களைத்தான் மெய்ப்பொருளாம் பேதம்' என்றார் என்க. மார்க்கப் பிணக்கறுக்கும் போதமாவது அக் கடவுளைப்பற்றிய பல்வகைச் சமயங்களிலும் தற்சமயம் இது தான் என்று துணிந்து உண்மை அறியும் தத்துவஞானமாகும். விந்து - தாது நாதம் - இந்திரியம்.

15. நாயகம் ஆன மலர்கு அகம் ஆவதும் ஞானஇன்பம்
சேயகம் ஆன மலர்அகம் ஆவதும் தீவினையால்
ஏய்அகம் மாறி விடும்அகம் ஆவதும் எவ்வுயிர்க்கும்
தாயகம் ஆவதும் தாதுஆர் சுவேத சரோருகமே.

Koviloor Digital Library

தெளிவுரை:

கலைமகள் வீற்றிருக்கும் பெருமை பெற்றதன் காரணமாக எல்லாமலர்களுக்கும் தலைமைமலராக விளங்கப் பெறுவதும், ஞானநலம் கனிதலாகிய சேய் (குழந்தை) வளருமிடமான மலராக விளங்கப்பெறுவதும், முற்பிறப்பில் செய்த தீவினையால் உண்டாகிய செருக்கு நீங்குதற்கு உரிய இடமாக விளங்கப் பெறுவதும், எல்லா உயிர்கட்கும் தாய் வீடாக விளங்கப் பெறுவதும் யாதெனின் மகரந்தப் பொடிகள் நிறைந்துள்ள வெண்டாமரை மலரேயாம்.

சிறப்புரை:

"கலைமகள் வீற்றிருக்கின்ற காரணத்தால் மலர்களில் முதன்மை மலராகத் திகழ்ந்தது; பேரின்பத்திற்குக் காரண மான கல்விக்குரிய மகள் இருக்கும் இடமாயிற்று; தன்னைத் தியானித்தவரின் தீவினையை நீக்கி, பரிசுத்தமாக்கும் பேற்றினைப்பெற்றது. அனைத்து உயிர்களையும் படைக்கும் நான்முகனது தோல்வியாதல்பற்றித் தாயான கலைமகளுக்கு இருப்பிடமாதல் பற்றி அனைத்துயிர்க்கும் தாய்வீடு ஆகும் பேறு பெற்றது" என இவ்வாறு வெண்தாமரை பெற்ற சிறப்புகளை அடுக்கடுக்காகக் கூறினார் என்பதாம். சுவேதம் - வெண்மை; சரோருகம் - தாமரை. சுவேத சரோருகம் - வெண்தாமரை (வடசொற்றொடர்).

16. சரோருக மேதிருக் கோயிலும் கைகளும் தாளிணையும்
உரோருக மும்திரு அல்குலும் நாபியும்ஓங்கு இருள்போல்
சிரோருகம் சூழ்ந்த வதனமும் நாட்டமும் சேயிதழும்
ஓர்ஓர்உகம் ஈர்அரை மாத்திரை ஆனவுரை மகட்கே.

தெளிவுரை:

உரைமகட்கே, திருக்கோயிலும் கைகளும், தாளிணையும், உரோருகமும், அல்குலும், நாபியும், வதனமும், நாட்டமும், சேயிதழும் சரோருகமே எனக்கூட்டிப் பொருள் காண்க.

ஒவ்வொரு யுகமும் ஒருமாத்திரைப் பொழுதெனப்பெற்ற கல்விக்கடவுளாகிய கலைமகள் அன்னைக்கு, எழுந்தருளி

Koviloor Digital Library

யிருக்கும் அழகிய இருப்பிடமும், இருகைகளும், இரு திருவடிகளும், இரண்டு முலைகளும், அல்குலும், கொப்பூழும் இருளெனவிளங்கும் கூந்தல் சூழப்பெற்ற திருமுகமும், இரு திருக்கண்களும், சிவந்த அதரங்களும், ஆகிய இவ்வுறுப்புக்கள் அனைத்தும் செந்தாமரை மலர்களேயாம்.

சிறப்புரை;

கலைமகளின் அனைத்து அங்கங்களும் தாமரை மலர் போன்று விளங்குகின்றன என்பது கூறப்பட்டது. சரோருகம் - தாமரை; உரோருகம் - முலைகள் மார்பில் பூத்துள்ளன. ஆகலின் வடமொழியில் இப்பெயர் வந்தது. காரணப்பெயர். சிரோருகம் - கூந்தல், சிரத்தில் முளைத்துள்ளதாதலின் வடமொழியில் இப்பெயர் வந்தது என்க. காரணப் பெயர். நாபி - கொப்பூழ்; நாட்டம் - கண்கள். கிருதயுகம்; திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் என்று நான்குயுகங்கள் ஆயிரம் கழிந்தால் நான்முகனுக்கு ஒருபகலாம். எனவே ஒருயுகம் என்பது நான்முகனுக்கு ஒரு வினாடி ஆயிற்று. அவனது துணைவி கலைமகள் ஆதலால் அவளுக்கும் ஒருயுகம் என்பது ஒருமாத்திரையாம். எனவேதான் 'ஓர் ஓர் உகம் ஈர் அரை மாத்திரை ஆன உரைமகள்' எனக்குறிப் பிட்டார் என்பதாம்.

17. கருந்தா மரைமலர் கண்தா மரைமலர் காமருதாள்
அருந்தா மரைமலர் செந்தா மரைமலர் ஆலயமாத்
தருந்தா மரைமலர் வெண்தா மரைமலர் தாவில் எழில்
பெருந்தா மரைமணக்கும் கலைக்கூட் டப்பிணை தனக்கே.

தெளிவுரை:

கலைக் கூட்டப்பிணை தனக்கே, கண்தாமரைமலர் கருத்தாமரைமலர் காமருதாள் அருந்தாமரைமலர், செந்தா மரை மலர், ஆலயமாகும் தாமரை மலர் வெண்தாமரைமலர் எனக் கூட்டிப் பொருள் காண்க.

குற்றமற்ற அழகினையுடைய சிறந்த தாமரை மலரில் வசிக்கும் கலைஞானங்களின் தொகுதிக்கு உரியவளான

Koviloor Digital Library

பெண்மான் போன்ற கலைமகளுக்கு, கண்களாகிய தாமரை மலர்கள் கருந்தாமரை எனப்படும் நெய்தல் மலர்கள் ஆகும். யாவராலும் விரும்பப்படுகின்ற அவரின் அழகிய திருவடி களாகிய அரிய தாமரைமலர்கள் செந்தாமரை மலர் போன்ற வையாம். எழுந்தருளியிருக்கும் பீடமாக அமைந்தமலர் வெண்டாமரை மலரேயாம்.

சிறப்புரை:

கருநெய்தல் வடமொழியில் 'நீலாம்புஜம்' என வழங்கப் படுதலால் இங்கு கருந்தாமரைக்கு கருநெய்தல் எனப்பொருள் கொள்ளப்பட்டது. கருந்தாமரை, செந்தாமரை, வெண்டாமரை என்னும் மூவகைத் தாமரை மலர்களையும் கலைமகளோடு இயைபுபடுத்திக் கூறியிருப்பதைக் காண்க. நான்காம் அடியில் மானின் வேறு பெயர்களாகிய, மரை, கலை பிணை என்று சொற்கள் வரும்படியாக அமைத்திருப்பது கவிஞரின் ஒருவகைச் சாதுரியமாகக் கருதவேண்டும். பாடல் சொற் பொருட்பின் வருநிலையணி; தாவில் - குற்றமற்ற; பிணை - பெண்மான் போன்ற கலைமகள்.

18. தனக்கே துணிபொருள் என்னும் தொல்வேதம் சதுர்முகத்தோன்
எனக்கே சமைத்து அபிடேகம் என்னும் இமையவர்தாம்
மனக்கேதம் மாற்றும் மருந்துஎன்ப சூடும்மலர் என்பன்யான்
கனக்கேசம் பந்திக் கலைமங்கை பாத கமலங்களே.

தெளிவுரை:

கலைமங்கை பாதகமலங்களே, சூடுமலர் என்பன் யான் என இயைத்துப் பொருள் கொள்க.

மேகம் போன்ற கூந்தல் தொகுதியினையுடைய கலை மகளின் திருவடித் தாமரை மலர்களை.

அநாதியான வேதம் தனக்கே நிச்சயிக்கப்பட்ட பொருள் என்று பெருமையுடன் கூறும் நான்முகன் தனக்கே உரியதாக அமைந்த கிரீடம் என்று சொல்வான்; ஏனைய தேவர்களோ தங்கள் மனத்திலுள்ள அறியாமையாகிய நோயைத் தீர்க்கும்

Koviloor Digital Library

அருமருந்து என்று சொல்வார்கள். ஆனால் நானோ தலைமேல் சூடும் பூ என்று சொல்வேன்.

சிறப்புரை:

கலைமகளின் திருவடித்தாமரைகளை, நான்முகன், இமையவர், கவிஞர் (தான்) எவ்வாறு போற்றுகின்றனர், என்பதை அற்புதமாகக் கூறுகின்றார் கவிஞர். அபிஷேகம் என்ற வடசொல்லுக்கு திருமுடி என்ற பொருள் உண்டு. ஊடல் தணிக்கும் காலத்துக் கணவன், மனைவியின் பாதகங்களைத் தன் முடிமேல் கொள்வது பற்றி நான்முகன், கலைமகளின் திருவடித் தாமரைகளை அபிடேகமாகக் கொண்டான் என நயம்பட கலைமகளுக்கு ஏற்றத்தைத் தருகின்றார் கவிஞர். கேசபத்தி - மயிரொழுங்கு; கேதம்-துன்பம்; சதுர்முகத்தோன் - நான்முகன்.

19. கமலந் தனில்இருப்பாள் விருப்போடு அம்கரம் குவித்துக்
கமலங் கடவுளர்போற்றும் என்பூவை கண்ணில் கருணைக்
கமலங் தனைக்கொண்டு கண்டுஒருநாள் தம்கருத்துள் வைப்பார்
கமலம் கழிக்கும் கலைமங்கை ஆரணி காரணியே.

தெளிவுரை:

கமலந்தனில் இருப்பாள், கடவுளர் விருப்போடு, அம்கரம் கமலம் குவித்து, போற்றும் மென்பூவை, ஆரணி, காரணி, கலைமங்கை,

ஒரு கால் தம் கருத்தில் வைப்பார் கம் மலம், கண்ணில் கருணைக் கமலம்தனைக் கொண்டு கண்டு கழிக்கும் எனக் கொண்டு கூட்டிப் பொருள் கொள்க.

தாமரை மலரில் வீற்றிருப்பவளும், தேவர்கள் விருப்பத் துடன் அழகிய தாமரை மலர்களாகிய கைகளைக் கூப்பி, துதிக்கின்ற, மென்மையான கிளி போன்றவளும், வேதங் களின் சொரூபமாயிருப்பவளும், எல்லாவற்றிற்கும் காரண மாக விளங்குபவளும், ஆகிய கலைமகள்.

தன்னை ஒரு முறை தமதுமனத்தினுள் பொருந்தி, தியானிப்பவர்களுடைய அறிவுக்குற்றங்களை, தனது

Koviloor Digital Library

திருக்கண்களினின்று வெளியாகின்ற அருள் வெள்ளத்தைச் சொரிந்து, நீக்கி, கிருபை செய்வாள்.

சிறப்புரை:

கலைமகளை மாந்தர்கள், தம் மனம், வாக்குக் காயங் களால் பொருந்தி, தியானித்தால் அவர்களுடைய அறிவுக் குற்றங்களை நீக்கி, அருள்செய்வாள் என்பதாம். மென்பூவை - மென்மையான மைனா போன்றவள். உவமை ஆகுபெயர். கருத்து - மனம்; 'கமலம்' என்ற சொல் இங்கு முதல் இரண்டடிகளில் 'தாமரை' என்னும் பொருளிலும், மூன்றாம் அடியில் 'நீர்' என்னும் பொருளிலும் நான்காம் அடியில் (கம்+மலம் என்று பிரித்து) 'அறிவுக்குற்றம்' என்னும் பொருளிலும் வருதல் காண்க. எனவே பாடல் சொற்பின் வருநிலையணியாயிற்று. நான்காம் அடியில் வரும் 'கமலம்' என்பதை 'அகமலம்' என்ற சொல்லின் முதற்குறையாகக் கொண்டு 'மனக்குற்றம்' எனப்பொருள் கொள்வாரும் உளர்.

20. காரணன் பாகமும் சென்னியும் நேர்தரு கன்னியரும்,
நாரணன் ஆகம் அகலாத்திரு வும்ஓர் நால் மருப்பு
வாரணன் தேவியும் மற்றுள்ள தெய்வ மடந்தையரும்
ஆரணப் பாவை பணித்த குற்றேவல் அடியவரே.

தெளிவுரை:

காரணன் என்று ஆகமத்தில் எடுத்துச் சொல்லப்பட்ட வனான சிவபெருமானது இடப்பாகத்திலும், திருமுடியிலும் முறையே சேர்ந்துள்ள இளமகளிர்களான உமையம்மை, கங்கை என்பவர்களும், திருமாலினது மார்பைவிட்டு நீங்காது நித்திய வாசம் செய்கின்ற திருமகளும், நான்கு தந்தங்களை யுடைய ஒப்பற்ற ஐராவதமென்னும் யானைக்குரியவனான இந்திரனின் மனைவியாகிய இந்திராணியும் ஏனைய தேவ மாதர்களும்,

வேதங்களின் சொரூபமாக விளங்கும் கலைமகளின் கட்டளைப்படி சிறிய குற்றேவல்களைச்செய்யும் தொழும் பர்களே ஆவார்கள்.

Koviloor Digital Library

சிறப்புரை:

கலைகளுக்கு உரிய தெய்வமான கலைமகளின் முதன்மையை இப்பாட்டில் மிகுதியாகப் புகழ்ந்து துதித்தார் என்க. சைவாகம நூல்கள் இருபத்தெட்டில் ஒன்று காரணம் என்னும் நூல் ஆகும். அதற்கு உரியவன் ஆகையால் 'சிவபெருமான்' காரணன் எனப்பட்டான். யாவர்க்கும் முதன்மையாகத் திகழும் மும் மூர்த்திகளில் ஒருவன் ஆதலின் 'காரணன்' எனப்பட்டான் என்று கூறலும் ஒன்று. சிவபெருமான் திருமுடியிலிருந்து நீங்காது சேர்ந்திருந்தாலும், முத்துக்குமரனை உண்டாக்குதற்குச் சிவபெருமான் தன் நெற்றிக் கண்ணிலிருந்து தோற்றுவித்த அனற்பொறிகளை ஏற்றுக் கொண்டமையாலும் கங்கையை, 'காரணன் சேர்தரு கன்னி' என்றார் என்க. 'நாரணன் ஆகம் அகலாத் திரு' என்பதை பெரியாழ்வார் 'வலமார்பினில் வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு' என்று கூறியதைக்காண்க. வாரணம் - யானை (ஐராவதம்).

21. அடிவேதம் நாறும் சிறப்புஆர்ந்த வேதம் அனைத் தினுக்கும்
முடிவே! தவள முளரிமின்னே! முடியா இரத்ன
வடிவே! மகிழ்ந்துபணிவார் தமதுமயல் இரவின்
வடிவே! அறிந்து என்னை ஆள்வார் தலந்தனில் வேறிலையே.

தெளிவுரை:

திருவடிகளாகிய வேதங்களில் மணம் வீசுகின்ற மேன்மை பொருந்திய வேதங்கள் எல்லாவற்றிற்கும் தேர்ந்த கருத்தாக உள்ளவளே! வெண்தாமரை மலரில் வீற்றிருக்கின்ற மின்னற் கொடி போன்று விளங்குபவளே! அன்புடன் வணங்கும் அடியார்களுடைய அறியாமையாகிய இருளினை நீக்கும் உதயசூரியனாக உள்ளவளே! என்னுடைய நிலையை அறிந்து என்னை ஆட்கொண்டு பாதுகாப்பவர் இவ்வுலகில் நின்னைத் தவிர வேறுயாருமில்லை.

சிறப்புரை:

இப்பாட்டின் மூலம் தமக்குக் கலைமகளின் அருளன்றி வேறு கதியில்லை என்பதை எடுத்துக்காட்டினார்.

Koviloor Digital Library

"அடிவேதம் நாறும் சிறப்பார்ந்த வேதம் அனைத்தினுக்கு முடிவே" என்றதற்கு 'வேத வேதாந்தத்தின் சொரூபமாக விளங்குபவள்' என்பது கருத்தாம். தவளம் -வெண்மை; தலம்-உலகம்; விடிவு - பொழுது விடியும் காலம் சூரியோதயம். 'பணிவார் தமது மயலிரவின் விடிவு' என்பதற்கு 'தன் அடியார்களின் அக இருளை நீக்குபவள்' என்று கருத்தாம்.

22. வேறிலை என்றுஉன் அடி யாரில் கூடிவிளங்கு நின்பேர்
கூறலை யானும் குறித்துநின்றேன் ஐம்புலக் குறும்பாம்
மாறுஅலை கள்வர் மயக்காமல் நின்மலர்த்தாள் நெறியில்
சேறலை ஈந்துஅருள் வெண்டாமரை மலர்ச்சே யிழையே.

தெளிவுரை:

வெண்டாமரை மலர்ச்சேயிழையே, நின்மலர்த்தாள் நெறியில், சேறலை ஈந்து அருள்! என இயைத்துப் பொருள் காண்க.

வெண்தாமரை மலரில் வீற்றிருக்கும் அழகிய ஆபரணங் களை அணிந்த நாமகளே! உன்னையன்றி வேறுகதி இல்லை என்று நிச்சயித்து, உன் அடியார்களில் நானும் ஒருவனாகச் சேர்ந்து, சிறப்புப் பெற்று விளங்குகின்ற நின் திருநாமங் களைச் சொல்லுதலை, குறிக்கோளாகக் கொண்டு விளங்கு கின்றேன். ஆகலின் ஐம்புலன்களின் தீமைகளாகிய, ஆறலை கள்வர்கள் என்னை மயங்கச் செய்யாதபடி, இருந்து நின் திருவடித்தாமரை மலர்களின் வழியே செல்லும் தன்மையை எனக்குத் தந்து அருள்புரிவாய்.

சிறப்புரை:

'வழிப்பறிக்கள்வர்கள் நேர்வழியில் செல்ல வொட்டாது, கொடு வழியில் செல்லும்படி சூழ்ச்சி செய்வது போல, என்னுடைய ஐம்புலன்கள் என்னை மயக்க தீ நெறிகளில் செல்லவொட்டாதபடி காத்து, என்னை ஆட்கொண்டு நின் திருவடிகளைப் பின்பற்றிச் செல்லுதலாகிய நல் நெறியைக் காட்ட வேண்டும் என வேண்டுகின்றார் என்க. ஐம்புலன்கள் மனம் போனபடி செல்லக்கூடிய இயல்புடையன. ஆகையால்

Koviloor Digital Library

'ஐம்புலக்குறும்பு' என்றார். சேயிழையே - பண்புத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை. இழை- அணிகலம்.

23. சேதிக்கலாம் தர்க்க மார்க்கங்கள் எவ்வெவர் சிந்தனையும்
சோதிக்கலாம் உறப்போ திக்கலாம் சொன்னதே துணிந்து
சாதிக்கலாம் மிகப்போ திக்கலாம் முத்திதான் எய்தலாம்
ஆதிக்கலா மயில்வல்லி பொற்றா ளையடைந் தவர்க்கே.

தெளிவுரை:

வல்லி பொற்றாளை அடைந்தவர்க்கு, தர்க்கமார்க்கங்கள் சேதிக்கலாம்; எவ்வெவர் சிந்தனையும் சோதிக்கலாம், உறப்போதிக்கலாம், சொன்னதே துணிந்து சாதிக்கலாம், முத்திதான் எய்தலாம் எனக் கூட்டிப்பொருள் கொள்க.

தொன்மையான கல்விக்குரிய மயில் போன்ற சாயலை யுடையவளும், பூங்கொடி போன்றவளும், ஆகிய கலைமகளின் அழகிய திருப்பாதங்களைச் சரணம் அடைந்தவர்களுக்கு.

தம்மை எதிர்த்துத் தர்க்கப் போர் செய்பவர்களுடன் முறையுடன் வாதிட்டுக் கண்டிக்க இயலும்; எல்லார்க்கும் எல்லாப் பொருள்களைப் பற்றியும் மனம் பொருந்த சொல்ல இயலும்; தாம் சொன்ன கருத்தையே நிலை நாட்டக்கூடிய திறமை உண்டாகும். தமது கொள்கைக்கு மாறாக வாதிடுகின்றவர்களின் கொள்கைகளை ஆதாரபூர்வமாகக் கண்டிக்கக்கூடிய திறமை உண்டாகும். அதன் மூலம் இறுதியில் முத்திப் பேற்றினை அடைய இயலும்.

சிறப்புரை:

கலைமகளைச் சரணமடைந்தவர்க்கு அவ்வன்னையின் அருளால் இப்பிறப்பில் வாதிடும் வன்மை, போதிக்கும் திறம் ஆகிய நல்சக்திகள் உண்டாகும். மறுமையில் முத்தியும் கிடைக்கும் என்பது கருத்தாம். சேதித்தல் - கண்டித்தல்; கலா (வடசொல்) - கல்வி.

Koviloor Digital Library

24. அடையாளம் நாள்மலர் அங்கையில் ஏடும்மணி வடமும்
உடையாளை நுண்ணிடை ஒன்றும் இலாளை உபநிடதப்
படையாளை எவ்வுயிரும் படைப்பாளைபது மநறும்
தொடையாளை அல்லது மற்றுஇனி யாரைத் தொழுவதுவே.

தெளிவுரை:

நாள்மலர் அங்கையில் ஏடுமணி வடமும் அடையாளம் உடையாளை எனக் கொள்க.

அன்றலர்ந்த தாமரை மலர் போன்ற திருக்கைகளில் புத்தக ஏடும், அழகிய ஜபமாலையும் தனக்குரிய அடையாளங் களாகக் கொண்டுள்ளவளும், நுண்ணிய இடைஎன ஒன்று சிறிதும் இல்லாதவளும், உபநிடதங்களைத் தன்னுடைய படைக் கலங்களாகக் கொண்டுள்ளவளும், எல்லா உயிர் களையும் தோற்றுவிப்பவளும் மணம் வீசுகின்ற செந்தாமரை மலர் மாலையை அணிந்தவளுமாகிய கலைமகளை அல்லாமல் இனி யான் வேறு யாரை வணங்குவேன்?

சிறப்புரை:

பிறர் எவரும் வணங்குவதற்கு உரியர் அல்லர். ஆகையால் நின்றனயே வணங்குவேன் என்பது கருத்தாம். 'இனி' என்பது கலைமகளைச் சரணமடைந்தபின்பு எனக்கொள்க. சரசுவதி இடக்கையில் புத்தகத்தையும் வலக்கையில் படிகமாலையையும் உடையவள் ஆவாள். இதனையே கம்பர் தம்முடைய இராமாயணத்தில் 'புத்தகம் படிக மாலை குண்டிகை பொருள் சேர் ஞான வித்தகம் தரித்த செங்கை விமலை' என்கின்றார். நாள்மலர் புதியமலர் அடையாளம் என்பது பிறர்க்கு நல்லுணர்வு உபதேசித்தலுக்கு அறிகுறியாக விளங்கும் ஞானமுத்திரையைக் குறிக்கும் எனவும் பொருள் கொள்வர். கட்டை விரல் நுனியையும், சுண்டுவிரல் நுனியையும் ஒன்று சேர்த்து மற்றை மூன்று விரல்களையும் நேர் நிற்கவைக்கும் நிலையே ஞானமுத்திரையாகும், 'நுண்ணிடை ஒன்றுமிலாள்' என இடையின் நுண்மைத்

Koviloor Digital Library

தன்மை உயர்வு நவிற்சியாகக் கூறப்பட்டது. பதுமம் - தாமரை; மணிவடம் - படிகமாலை (ஜபமாலை)

25. தொழுவார் வலம்வருவார் துதிப்பார் தம்தொழில் மறந்து
விழுவார் அருமறை மெய்தெரிவார் இன்பம் மெய்புளகித்து
அழுவார் இனும் கண்ணில்நீர்மல் குவார் என்கணா
வதென்னை
வழுவாத செஞ்சாற் கலைமங்கை பால் அன்பு வைத்தவரே.

தெளிவுரை:

"மங்கைபால் அன்பு வைத்தவர், தொழுவார், வலம் வருவார் விழுவார், தெரிவார், அழுவார், கண்ணில் நீர்மல்குவார், என்கண் ஆவது என்னை" எனக் கூட்டிப் பொருள் கொள்க.

வழுவற்ற சிறந்த சொற்களையுடைய கல்விக்குரிய கலைமகள்பால் பக்திகொண்டவர்கள், அப்பிராட்டியைத் தொழுவார்கள்; வலம் வந்து வணங்குவார்கள்; தோத்திரம் செய்வார்கள்; மெய்மறந்து கீழே விழுந்து கிடப்பார்கள்; அறிதற்கு அரிய வேதங்களின் உட்பொருளை உணர்வார்கள்; பேரின்பத்தால் உடல் பூரித்து, ஆனந்தக்கண்ணீர் விடுவார்கள். செயலற்று அழுவார்கள். இத்தகைய உள்ளத்திலிருந்து எழுந்த செயல்களில் இது என்னிடத்து உண்டாகிறது? (எதுவும் உண்டாவதில்லை).

சிறப்புரை:

பக்தி மேலீட்டினால் உண்டாகின்ற மெய்ப்பாடுகளுள் ஒன்றும் என்பால் உண்டாவதில்லை எனத் தன் பக்தியின் திறத்தைப் பணிவோடு கூறுகின்றார் என்க.

26. வைக்கும் பொருளும் இல்வாழ்க்கைப் பொருளும்மற்று
எப்பொருளும்
பொய்க்கும் பொருள் அன்றி நீடும் பொருள் அல்ல பூதலத்தின்
மெய்க்கும் பொருளும் அழியாப் பொருளும் விழுப்பொருளும்
உய்க்கும் பொருளும் கலைமான் உணர்த்தும் உரைப்பொருளே.

Koviloor Digital Library

தெளிவுரை:

பாடுபட்டுத் தேடி வைக்கும் பொருட்செல்வமும், இல்வாழ்க்கையின் பயனாக உண்டாகும் மக்கள், சுற்றம் போன்ற செல்வங்களும் மற்றைய அஷ்ட ஐசுவரியங்களும் அழியக்கூடிய பொய்ப்பொருள்களே தவிர அழிதலில்லது நீடூழி, காலம் நிலைத்து நிற்பவை அல்ல. இப்பூதலத்தில் அழியாது நிலைத்து நிற்கும் பொருளும், மறுமைக்குரிய அழிவில்லாத பொருளும், முத்தியில் சேர்ப்பதான தத்துவப் பொருளும் கல்விக்கு உரிய கலைமகள் உணர்த்தும் சொற்களின் பொருளேயாகும்.

சிறப்புரை:

செல்வப் பொருள், போலன்றி கஃவிப் பொருள் நிலை பெற்று இருக்கும் தன்மையும், கலைமகளின் வடிவமான சொல் நித்தியமானது என்பதும் இங்கு விளக்கப்பட்டன. கலைமான் - கலைமகள்; மற்றுப்பொருள் - அஷ்ட ஐசுவரியங்கள். அவையான (1) ராஜாங்கம் (2) வாகனம் (3) அடிமை (4) சுற்றம் (5) நெல் (6) பொன் (7)மக்கள் (8) மணி.

27. பொருளால் இரண்டும் பெறலாகும் என்றபொருள் பொருளோ
மருளாத சொற்கலை வான்பொருளோ பொருள் வந்து வந்தித்து
அருளாய் விளங்கும் அவர்க்கு ஒலியாய் அறி யாதவருக்கு
இருளாய் விளங்கும் நலம்கிளர் மேனிஇலங்கு இழையே!

தெளிவுரை:

'இலங்கு இழையே, பொருளால் இரண்டும் பெறலாகும் என்ற பொருள் பொருளோ மருளாத சொற்கலைப் பொருளே வான் பொருள்' என இயைத்துப் பொருள் கொள்க.

அருகில் வந்து தன்னை வணங்கி, தனது திருவருளுக்கு இலக்காகி, சிறப்புற்ற அடியார்களுக்கு ஒலிமயமாகத்

Koviloor Digital Library

தோன்றி, தனது சீர் சால் சிறப்பினை உணராது நிற்கும் மருள்தன்மை மிக்கவர்களுக்குப் புலனாகாது நின்று, சுயம் பிரகாசமாய் விளங்குகின்ற அழகிய திருமேனியையும் ஒளி விளங்கும் அணிகலன்களையும் உடையவளான கலைமகள் அன்னையே! அறம், பொருள், இன்பம் என்ற முப்பொருளில் இடையில் உள்ள பொருளினால் ஏனைய அறம், இன்பம் ஆகிய இரண்டினை அடையலாம் என்று சிறப்பித்துக் கூறப்பட்ட பொருட்செல்வம் சிறந்தது ஆகுமா? (சிறந்தது ஆகாது) அறியாமையாகிய மயக்கத்தை ஒழிக்சின்ற சொற் களையுடைய கல்விச் செல்வமோ எனின் அதுவே உயர்ந்த பொருளாம்.

சிறப்புரை:

கலைமகளுக்கு உரியதான கல்விப்பொருளைச் சிறந்தது என்றும் ஏனைய பொருட்செல்வம் அழியுந்தன்மையுடையது. ஆகலின், சிறந்தசெல்வம் ஆகாது என்று பாட்டில் கூறுகின்றார் என்க பொருளால் இரண்டும் பெறலாகும் என்ற கருத்தை "ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியோர்க்கு எண்பொருள், ஏனை இரண்டும் ஒருங்கு" 'அறன் ஈனும் இன்பமும் ஈனும் திறனறிந்து தீதின்றி வந்த பொருள்' என்னும் திருக்குறள் பாக்களிலும் 'வடுவிலா வையத்து மன்னிய மூன்றில் நடுவணது எய்த இருதலையும் எய்தும்' என்னும் நாலடியார் தொடரிலும் வருதல் காண்க. வான்பொருள் - மேலான பொருள்; வந்தித்து - வணங்கி.

28. இலங்கும் திருமுகம் மெய்யில் புளகம் எழும் கண்கள் நீர்
மலங்கும் பழுதற்றவாக்கும் வலிக்கும் மனம் மிகவே
துலங்கும் முறுவல் செயக்களி கூறும் சுழல் புனல் போல்
கலங்கும் பொழுது தெளிவும் சொல் மானைக் கருதினர்க்கே.

தெளிவுரை:

"மானைக் கருதினர்க்கு, திருமுகம் இலங்கும்; மெய்யில் புளகம் எழும்; கண்கள் நீர் மலங்கும்; பழுது அற்ற வாக்கும் பலிக்கும்; மனம் மிகவே துலங்கும்; முறுவல் செய களிகூரும்;

Koviloor Digital Library

கலங்கும் பொழுது தெளியும்'' என இயைத்துப் பொருள் காண்க.

சொற்களுக்கு உரிய கலைமகளைத் தியானித்தவர்களுக்கு, திருமுகம் மலர்ந்து விளங்கும்; உடம்பில் மயிர்சிலிர்ப்பு உண்டாகும்; கண்களில் ஆனந்தக் கண்ணீர் ததும்பும்; குற்றம் அற்ற நன்மை தரக்கூடிய சொற்கள் வெளிப்படும்; மனம் தெளிவடையும். புன்முறுவல் உண்டாகும்படி மகிழ்ச்சி மிகுந்து தோன்றும்; நீர்ச்சுழி படுகின்ற நீர் போலக் கலக்கம் உண்டாகும்பொழுது அக்கலக்கம் ஒழிந்து தெளிவு உண்டாகும்.

சிறப்புரை:

'உறுங்கவல் ஒன்று உற்று உழியும் கைகொடுக்கும் கல்வி' ஆதலால் 'கலங்கும் பொழுது தெளியும்' என்றார் என்க. வாக்கு - சிறந்த சொற்கள் உண்டாகும். சொல்வாக்கு மிகுந்தால் செல்வாக்கு உயரும் என்பது ஒருதலை.

29. கரியார் அளகமும் கண்ணும்கதிர் முலைக்கண்ணும் செய்ய
சரியார் கரமும் பதமும் இதமும் தவளநறும்
புரியார்ந்த தாமரை யும்திரு மேனியும் பூண்பனவும்
பிரியாதுஎன் நெஞ்சினும் நாவினும் நிற்கும் பெருந்திருவே.

தெளிவுரை:

உன்னைச் சரணம் அடைந்தவர்க்குப் பெரும் செல்வம் உண்டாதற்குக் காரணமாக விளங்கும் கலைமகளே! உன்னுடைய சுருண்ட நெற்றி மயிரினையுடைய கூந்தலும், இருகண்களும்; ஒளிமிக்க இருமுலைக்கண்களும், வளை யல்கள் அணியப்பெற்ற சிவந்த கரங்களும், திருவடிகளும், இதழ்களும், மணம் வீசும் முறுக்குடையதான வெண்தாமரை மலரும், திருமேனியின் பொலிவும், அணிந்து கொள்ளும் அழகிய அணிகலன்களும் முதலிய உனது சம்பந்தம் பெற்ற எல்லாப் பொருள்களும் விட்டுப்பிரியாமல் என்மனத்திலும், நாவிலும் நிலைத்து நிற்கும்.

Koviloor Digital Library

சிறப்புரை:

பெருந்திருவே என்பது விளி எப்பொழுதும் நான் உனது சம்பந்தம் பெற்ற பொருள்களையே நினைத்தும், போற்றியும் இருப்பேன் என்றவாறு. அளகம்- கூந்தல்; தவளம்-வெண்மை.

30. பெருந்திருவும் சயமங்கை யும்ஆகி என்பேதை நெஞ்சில்
இருந்தருளும் செஞ்சொல் வஞ்சியைப் போற்றில்எல்லா உயிர்க்கும்
பொருந்திய ஞானம் தரும்; வேதப் பொருளுந்தரும்;
திருந்திய செல்வம் தரும்; அழியாப் பெருஞ்சீர் தருமே.

செல்வத்தைத்தரும் திருமகளின் சொரூபமாகவும், வீரத்தின் வடிவாய் விளங்கி நெற்றியைத்தரும் பார்வதியின் சொரூபமாகவும் விளங்கி, என் பேதை நெஞ்சில் எழுந்தருளி யிருக்கின்ற செவ்விய சொற்களுக்கு உரிய கலைமகளைப் போற்றித் துதித்தால்,

அப்பிராட்டி துதிக்கின்ற உயிர்கள் அனைத்திற்கும் நிலையான ஞானத்தினை அளித்து அருள்வாள்; பேரின் பத்தைக் கூறுகின்ற வேதத்தின் பொருளை விளக்கி அருள்வாள்; பரிசுத்தமான செல்வத்தைக் கொடுத்தருள்வாள்; அழிவற்றதான முக்திச் செல்வத்தையும் தந்து அருள்வாள்.

சிறப்புரை:

கலைமகளைத் துதித்து வணங்கினால் உண்டாகும் இம்மை மறுமைப்பயன்களை இப்பாட்டில் கூறுகின்றார் என்க. 'பெருந்திருவும் சயமங்கையும் ஆகி' என்பதற்கு 'ஸ்ரீ மகாலட்சுமியின் சொரூபமும் ஜெயலட்சுமியின் சொரூபமுமாக விளங்கி' எனவும் பொருள்கொள்வர். வஞ்சி - உவமை ஆகுபெயர்; அழியாப் பெருஞ்சீர் - முத்தி.

